**<u>சார்பு நீதிமன்றம், போளூர்</u>**

எம்.சி.ஓ.பி. எண்: 245/2024

DEPOSITION OF WITNESS: P.W.1

| | |
|---|---|
| பெயர் | பாபு |
| தந்தை பெயர் | அமாவாசை |
| வயது | 43 |
| கிராமம் | குருவிமலை |
| வட்டம் | கலசபாக்கம் |
| தொழில் | கூலி வேலை |

The Witness sweared under Oaths Act 1969 on this the day of 5th day of November 2025

**<u>முதல் விசாரணை</u>**

நான் இந்த மனுவில் 2ம் மனுதாரர். எனது முதல் விசாரணை சாட்சியத்தில் நிரூபண பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். முதல் தகவல் அறிக்கை சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.1** ஆகவும் 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான AP-39-TQ-1796 என்ற லாரியின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.2** ஆகவும் விபத்தில் இறந்த அமாவாசை என்பவரின் வாரிசு சான்று நகல் **ம.சா.ஆ.3** ஆகவும் விபத்தில் இறந்த அமாவாசையின் இறப்பு சான்று நகல் **ம.சா.ஆ.4** ஆகவும் விபத்தில் இறந்த அமாவாசையின் பிரேத பரிசோதனை அறிக்கை சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.5** ஆகவும் விபத்து ஏற்படுத்திய வாகனம் AP-39-TQ-1796 என்ற லாரியின் காப்பீடுபாலிசி நகல் **ம.சா.ஆ.6** ஆகவும் விபத்தில் இறந்த அமாவாசையின் ஆதார் அட்டை நகல் **ம.சா.ஆ.7** ஆகவும் போளூர் காவல் நிலைய குற்ற எண் 166/2022-ன் கீழ் பிரிவு மாற்று அறிக்கை ம.**சா.ஆ.8** ஆகவும் போளூர் காவல் நிலைய குற்ற எண் 166/2022-ன் குற்ற இறுதி அறிக்கை சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.9** ஆக குறியீடு செய்ய வேண்டுகிறேன். மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கு விபத்தில் இறந்த அமாவாசை என் தந்தை ஆவார். இந்த வழக்கில் 1ம் மனுதாரர் எனது தாயார் ஆவார். 3ம் மனுதாரர் எனது தம்பி ஆகும். நான்கு மற்றும் 5ம் மனுதாரர் எனது சகோதரிகள் ஆவார்கள். எனக்கு தற்போது 43 வயதாகிறது. எனக்கு திருமணம் ஆகவில்லை. எனது தம்பிக்கு 40 வயதாகிறது. அவருக்கு திருமணம் ஆகிவிட்டது. எனது சகோதரிகள் இருவருக்கும் இன்னும் திருமணம் ஆகவில்லை. 4 மற்றும் 5ம் மனுதாரர்களுக்கு சுமார் 34 வயது இருக்கும் என்றால் சரிதான். எனது தந்தை சைக்கிளில் செல்லும் போது தான் லாரி மோதி விபத்து ஏற்பட்டது. எனது தந்தை விவசாயம் மற்றும் கட்டிட மேஸ்திரி வேலை செய்தார்.

எனது தந்தை கட்டிட மேஸ்திரி சங்கம் உறுப்பினராக இருந்தாரா என்றால் எனக்கு தெரியாது. எனது தந்தை கட்டிட மேஸ்திரியாக வேலை பார்த்தது இல்லை என்றால் சரியல்ல. எனது தந்தையின் வருமானத்தை நிரூபிக்க ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது தந்தை வயதை நிரூபிப்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளோம். விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றும் அதனால் இந்த விபத்து யார் அஜாக்கிரதையால் ஏற்பட்டது என எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். இந்த விபத்து எனது தந்தையின் கவனக்குறைவால் ஏற்பட்டது என்றும் லாரி ஓட்டுனர் மீது தவறு இல்லை என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் லாரி ஓட்டுனருக்கு ஓட்டுனர் உரிமம் இல்லை என்றும் அதனால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைபட்டவர் அல்ல என்றால் சரியல்ல. எனக்கு இழப்பீடு கிடைக்க தக்கது என்றால் கூட 1ம் எதிர்மனுதாரர் தான் கொடுக்க வேண்டும் என்றால் எனக்கு தெரியாது. எனது தந்தை மாதம் ரூ.30,000/- சம்பாதிப்பதாக பொய்யாக சொல்கிறேன் என்றும் நாங்கள் கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகம் என்றால் சரியல்ல. நாங்கள் இறந்த எனது தந்தையின் வருமானத்தை நம்பி வாழவில்லை என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது. மறு விசாரணை இல்லை.**

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்<br><br>Sd/- S. Senthilbabu,<br><br>சார்பு நீதிபதி.<br>போளூர். |

**<u>சார்பு நீதிமன்றம், போளூர்</u>**

எம்.சி.ஓ.பி. எண்: 245/2024

DEPOSITION OF WITNESS: P.W.2

| | |
|---|---|
| பெயர் | ராமச்சந்திரன் |
| தந்தை பெயர் | சீனுவாசன் |
| வயது | 22 |
| கிராமம் | குருவிமலை |
| வட்டம் | கலசபாக்கம் |
| தொழில் | தனியார் நிறுவனத்தில் வேலை. |

The Witness sweared under Oaths Act 1969 on this the day of 5th day of November 2025

**<u>முதல் விசாரணை</u>**

நான் இந்த மனுவில் 2ம் மனுதாரர் தரப்பு 2வது சாட்சி ஆவேன். எனது முதல் விசாரணை சாட்சியத்தில் நிரூபண பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். ஆவணங்கள் ஏதும் இல்லை.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்தில் இறந்த அமாவாசையும் நானும் ஒரே ஊர்காரங்கள் என்றால் சரிதான். எங்களுக்குள் உறவு எதுவும் கிடையாது. நான் சென்னையில் BOX நிறுவனத்தில் வேலை செய்கிறேன். பொதுவாக ஏதாவது விஷேசம் என்றால் தான் நான் சென்னையில் இருந்து ஊருக்கு வருவேன் என்றால் சரிதான். இந்த விபத்து குறித்து நான் காவல் துறையில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். இந்த விபத்து குறித்து இறந்தவரின் மகளுக்கு நான் தகவல் தெரிவித்தேன். விபத்தின் போது அமாவாசை சைக்கிள் ஓட்டி சென்றார் என்றால் சரிதான். நான் விபத்து குறித்து மனுதாரர் ஜெயலட்சுமியிடம் தகவல் சொன்னதாக முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்றால் எனக்கு அது தெரியாது. அமாவாசை சைக்கிளில் செல்லும் போது லாரி பின்னால் வந்து மோதிவிட்டது. அமாவாசை வேலூரை நோக்கி சைக்கிளில் வந்தார். அதே திசையில் லாரி பின்னால் வந்தது. நான் ரோட்டிற்கு இடதுபுறம் சுண்ணாம்பு கால்வாய் அருகில் நின்றிருந்தேன். நான் இருந்த டீ கடைக்கும் விபத்து நடந்த இடத்திற்கும் இடையே 70 மீட்டர் இருக்கும். விபத்து நான் நின்ற டீ கடைக்கு முன்னால் இருக்கும் ரோட்டில் நடந்தது. உண்மையில் விபத்து டீ கடையை தாண்டி நடந்தது என்றால் சரியல்ல. விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றும்

நாங்கள் ஒரே ஊர்க்காரர்கள் என்பதால் மனுதாரருக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது. மறு விசாரணை இல்லை.**

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்<br><br>Sd/– S. Senthilbabu,<br><br>சார்பு நீதிபதி.<br>போளூர். |